Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 080 | வெள்ளிக்கிழமை Friday | 19.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## தமிழகத்தின் 17–வது சட்டப்பேரவைக் கூட்டம் தொடங்கியது:

# இருமொழிக் கொள்கை தொடரும், புதிய கல்விக் கொள்கை ஏற்கப்படாது

## தமிழக ஆளுநர் அர்லேகர் உறுதி



சென்னை: "இருமொழிக் கொள்கை தொடரும், புதிய கல்விக் கொள்கை ஏற்கப்படாது. ஒன்றிய அரசிடம் இருந்து தமிழகத்துக்கான நிதிப்பகிர்வினை பெற சட்டவல்லுநர் குழு அமைக்கப்படும். தமிழகத்துக்கான ஒன்றிய அரசின் பாரபட்சமான அணுகுமுறை அறிக்கையாக வெளியிடப்படும்." என சட்டப்பேரவையில் ஆளுநர் அர்லேகர் வாசித்த உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தின் 17–வது சட்டப் பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர்.வி. அர்லேகர் தலைமையில் காலை 10 மணிக்குத் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியது, இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் உரையை வாசித்தார். முன்னதாக முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பதவியேற்பு விழாக்களின் போது, ஆளுநர் மாளிகையில் முதலில் வந்தே மாதரமும், இரண்டாவதாக தேசிய கீதமும், மூன்றாவதாக தமிழ்த் தாய் வாழ்த்தும் பாடப்பட்டது சர்ச்சையை உருவாக்கியது. இந்தச் சூழலில், இன்றைய சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் அர்லேகர் தனது உரையில் அண்ணா, பெரியார், காமராஜர், அம்பேத்கர் ஆகியோரின் பெயர்களைக்குறிப்பிட்டுப்பேசினார். அவர் தனது உரையை 39 நிமிடங்களில் நிறைவு செய்தார். அரசு உரையை எந்த மாற்றமுமின்றி ஆளுநர் வாசித்ததாகவே தெரிகிறது.

ஆளுநர் உரையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள் வருமாறு: பெரியார், அண்ணா, காமராஜர், அம்பேத்கர், வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள் ஆகியோரை கொள்கை தலைவர்களாக கொண்டு, சாதி, மத, பண அரசியலைதாண்டி தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முதல்வர் விஜய்யால் மட்டுமே முடியும் என மக்கள் முடிவு செய்து தேர்தெடுத்துள்ளனர்.

தமிழக அரசு வரலாற்றில் இல்லாத வகையில் ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்று கூட்டணி ஆட்சி மூலம் புதிய சாதனை செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு தமிழகத்துக்கு தேவையான உதவிகளை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றிய அரசுக்கு தமிழக மக்கள் செலுத்தும் வரியிலிருந்து, தமிழகத்துக்கு உரிய நிதிப்பகிர்வினைப்பெற சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவே ற்றப்படும்.

தமிழகத்தில் மாநில நலன் குறித்து ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்படும். ஒன்றிய அரசிடம் இருந்து தமிழகத்துக்கான நிதிப்பகிர்வினை பெற சட்டவல்லுநர் குழு அமைக்கப்படும். தமிழகத்துக்கு வரவேண்டிய ஒவ்வொரு ரூபாய் வருவாயும் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, தமிழகத்துக்கான ஒன்றிய அரசின் பாரபட்சமான அணுகுமுறை அறிக்கையாக வெளியிடப்படும். தமிழகத்துக்கான நியாயமான நிதிப்பகிர்வை ஒன்றிய அரசிடம் இருந்து பெறுவது உறுதிசெய்யப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் நிதி நிலைமை மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. தமிழகத்தில் கடன் அளவு ரூ.10 லட்சம் கோடியை எட்டியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் கடன் இரு மடங்காக உயர்ந்துள்ளது. நிதிப்ப ற்றாக்குறை இருந்தாலும், இந்த அரசு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவே ற்றப்படும். போதைப்பொருளை முழுமையாக ஒழிக்க இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து வருகிறது.

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு பாதுக்காப்பான சூழலை உருவாக்குவதே இந்த அரசின் நோக்கம் ஆகும். தவறு செய்யும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.


வழிபாட்டு தலங்கள், பள்ளிகளுக்கு அருகில் இருந்த 717 மதுக்கடைகளை இந்த அரசு மூடியுள்ளது.

கனிமவளத்துறையில் நடக்கும் ஊழல் மூலம், அந்த துறையின் வருவாய் குறைந்துள்ளது. இயற்கை வளக் கொள்ளையை தடுத்து அரசின் வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறு, குறு விவசாயிகள் பெற்ற ரூ.75 ஆயிரம் வரையிலான கடன் முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட்டது. நீர்நிலைகளில் இருந்து வண்டல் மண் எடுக்க விவசாயிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# த.வெ.க., பா.ஜ.க. இடையே ரகசிய உடன்பாடு

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



சென்னை: "தவெக அரசு தயாரித்து கொடுத்த உரையை ஓர் எழுத்து, ஒரு வரி கூட மாற்றாமல் அப்படியே ஆளுநர் வாசித்துள்ளார். இதிலிருந்தே இந்த அரசுக்கும், பாஜகவுக்கும் இணக்கமான ஒரு தொடர்பு ஏற்பட்டுவிட்டதோ என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. என தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்

ஆளுநர் உரைக்கு பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், "ஆளுநர் உரை என்பது அரசு தயாரித்து கொடுக்கும் உரைதான். அந்த உரையில் ஆட்சியாளர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள், நிதி ஒதுக்கீடு குறித்து சொல்லப்பட்டிருக்கும். ஆனால் இன்றைய ஆளுநர் உரை ரீல்ஸ் போடுவதற்காக கண்டெண்ட் ஆக அமைந்துள்ளது.

தவெகவின் சொந்த சுய புராணங்களை தவிர்த்துவிட்டு பார்த்தால், ஒலிம்பிக் மையங்கள், திறன்பயிற்சி மையங்கள், இருமொழிக் கொள்கை, 69% இட ஒதுக்கீடு, தேசிய கல்விக் கொள்கை எதிர்ப்பு, நிலுவையில் உள்ள கல்வி நிதி கேட்டு கோரிக்கை, வறுமையில்லா தமிழ்நாடு, உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழி, சென்னையில் உச்ச நீதிமன்ற கிளை, கீழடி உள்ளிட்ட அகழாய்வுகள், இந்தியாவில் அதிகம் நகர மயமான மாநிலம் தமிழ்நாடு. இப்படி எங்கள் அரசின் திட்டங்கள், சாதனைகள், கோரிக்கைகளையே மீண்டும் படித்துள்ளனர்.

கடந்த அரசின் மீதான திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டிவிட்டு, இவர்கள் ஆட்சியின் தோல்விக்கான பழியை திமுக அரசின் மீது போட்டுள்ளார்கள். மிகுந்த காழ்ப்புணர்ச்சியோடு இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது. சென்ற ஆட்சியின் நிர்வாகம் சரியில்லை என குறிப்பிட்டுக் காட்டியுள்ளதை வன்மையாக கண்டிக்கிறோம். அப்படி ஆட்சி நிர்வாகம் சரியில்லாமல் இருந்திருந்தால், எப்படி அவர்கள் சுட்டிக்காட்டியபடி பல்வேறு திட்டங்களை நம் அரசு நிறைவேற்றிக் காட்டியிருக்கும்.

சென்றவாரம் டெல்லி நிதி ஆயோக் கூட்டத்தில், இந்தியாவிலேயே பொருளாதாரத்தில் இரண்டாவது இடத்தில் தமிழகம் உள்ளதாக முதல்வர் விஜய் பெருமை பேசியுள்ளார். இது கடந்த ஒரு மாத கால ஆட்சியின் சாதனைகளா?. எங்கள் ஆட்சியின் சாதனைகளையே அவர் டெல்லியில் வாசித்து வந்திருக்கிறார். மொத்த முரண்பாடுகளின் உருவமாக இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது.

இந்த அரசு அமைந்து 38 நாட்கள் ஆகிவிட்டது. இந்த அரசுக்கென சொல்வதற்கு சாதனைகள் எதுவும் இல்லை. இவர்கள் சொல்வது அறிவிப்பது எல்லாமே எங்கள் அரசின் திட்டங்கள் தான். இந்த அரசு காப்பி பேஸ்ட் அரசாக, ஸ்டிக்கர் அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பல்வேறு வாக்குறுதிகளை தவெக அளித்துள்ளது. அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முன்னோட்டமாக இந்த உரை இருக்கும் என எதிர்பார்த்தோம். சொன்ன வாக்குறுதிகளை, திட்டங்களை எப்போது நிறைவேற்றுவார்கள் என ஆளுநர் உரையில் இடம்பெறும் என எதிர்பார்த்தோம். ஆனால், இந்த உரை மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் தப்பித்துச் செல்ல முன்னோட்டமாக, வெள்ளை அறிக்கை என ஒரு வெற்று அறிக்கையை வெளியிட்டார்கள்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 175 பாலியல் வன்கொடுமைகள், 65 கொலைகள், 4 சாதிய ஆணவப் படுகொலைகள் தமிழகத்தில் நடந்துள்ளது. இப்போது முதல்வராக இருப்பவர் தேர்தல் பிரச்சாரத்தில் வீர வசனம் பேசினார். பச்சைக் குழந்தைகள், வீட்டில் இருக்கும் பெண்கள், வேலைக்கு போகும் பெண்களுக்கு நடக்கும் கொடுமையை சொல்ல முடியவில்லை சிஎம் சார் என, அப்போது எங்கள் தலைவரை பார்த்து வீர வசனம் பேசினார். இன்று அவர்கள் ஆட்சியில் நடக்கும் குற்றங்களை பார்க்கும் போது, 'கண்ணாடியை பார்த்து பேசுறீங்க சார்' என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளார். அதுவும் வேலியே பயிரை மேய்ந்த கதையாக, இன்று நடக்கும் குற்றங்களில் ஆளும் கட்சியினரே ஈடுபடுகின்றனர்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

## "எனது மகன் மிதுன் அரசியலுக்கு வரமாட்டார்"

## எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்





சென்னை: "எனது மகன் மிதுன் அரசியலுக்கு வரமாட்டார் என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். மேலும், ஆளுநர் உரையில் புதிதாக எந்த திட்டங்களும் இடம்பெறவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

ஃப்யூஸ் கேரியர் திருடு போனதாக பல்வேறு சாக்குபோக்குகளை கூறினார்கள். ஃபியூஸ் கேரியரை பிடுங்கிச் சென்றால் தமிழ்நாடு முழுவதும் எப்படி மின்வெட்டு ஏற்படும்?. முன்னர் அணில் ஓடியதால் மின்தடை ஏற்பட்டதாக திமுக சொன்னது. தற்போது இவர்கள் இதைச் சொல்கிறார்கள். தேவையான மின்சாரத்தை கொள்முதல் செய்து, தடையற்ற மின்சாரத்தை வழங்க வேண்டும். ஆளுநர் உரையில் புதிதாக எந்தத் திட்டங்களும் இடம் பெறவில்லை. அரசு சார்பில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் என்ன, அதே தான் ஆளுநர் உரையிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, பெண்களுக்கு பாதுகாப்பு தரப்படும் என வீர வசனம் பேசினார்கள். தற்போது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து காணப்படுகிறது.

எனது மகன் மிதுன் அரசியலுக்கு வருவது குறித்து தொலைக்காட்சிகளில் பல்வேறு விவாதங்கள் வருகிறது. அது தவறு. அவர் அதிமுகவின் அடிப்படை உறுப்பினராக மட்டும்தான் உள்ளார். கட்சியில் எந்தப் பதவியிலும் இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக குறிப்பிடுகிறேன். எனது மகன் மிதுன் அரசியலுக்கு வரமாட்டார் என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கிறேன். ஊடகங்கள் அவதூறு செய்திகளை வெளியிட வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன். அதிமுக தலைமை சரியாக இருந்ததால்தான் விஜயபாஸ்கர் வெற்றி பெற்றார் என்பதை மறந்துவிடக் கூடாது. அதிமுகவை எந்த கொம்பனாலும் அசைத்துகூட பார்க்க கூடாது. வெற்றி, தோல்வியை மாறி மாறிதான் பெற்று வருகிறோம். என்னை விமர்சித்தவர்கள், நான் அவர்களை விட வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன்" என்று அவர் தெரிவித்தார்.

## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

கோவையில் HDFC பரிவர்த்தன் – ராம்கி அறக்கட்டளை மொபைல் மருத்துவ அலகு சார்பில்

# கோவையில் காசநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியும் சிறப்பு பல் மருத்துவ முகாமும் நடைபெற்றது



கோவை நீலிக்கோணாம் பாளையத்தை அடுத்த மதுரைவீரன் கோவில்தெருவில்நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ஸ்ரீ கிரி பிரசாத் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்குதிட்ட ஒருங்கிணைப்பாளர் ஹஸ்கர் அலி கொக்கராட்டில் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட காயத்ரி, காசநோயின் அறிகுறிகள், தடுப்பு நடவடிக்கைகள், ஆரம்ப கட்டத்தில் நோயை கண்டறிவதன் அவசியம் மற்றும் முழுமையான சிகிச்சை பெறுவதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு பல் மருத்துவ முகாமில் மருத்துவர்கள் தமிழன்பன், அருண்ராஜ், சிவிமோள், சையது இப்ராஹிம் மற்றும் அனீஷ் ஆகியோர் பொதுமக்களுக்குமருத்துவசேவைகளை வழங்கினர். முகாமில் பல் பரிசோதனை, மருத்துவ ஆலோசனை, வாய்ச் சுகாதார விழிப்புணர்வு உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் மேல்சிகிச்சை தேவைப்படுவோருக்கு உரிய பரிந்துரைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்று பயனடைந்தனர். நோய் தடுப்பு, சுகாதார விழிப்புணர்வு மற்றும் தரமான மருத்துவ சேவைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள், உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடியில் நண்பர்கள் மற்றும் தொழில் ரீதியான பழக்கம் உள்ளவர்களிடமும் ஏமாற்றி

# ரூ.4 கோடி வரை மோசடி செய்த 4 பேர் மீது வழக்கு பதிவு செய்து பணம் திரும்பக் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார்



தூத்துக்குடியில் நண்பர்கள் மற்றும் தொழில் ரீதியான பழக்கம் உள்ளவர்களிடம் ரூ.4 கோடி வரை மோசடி செய்த 4 பேர்மீதுவழக்குப்பதிந்து, பணம் திரும்பக் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடியைச் சேர்ந்த பி.வேல்முருகன், எம்.சங்கர்கணேஷ், எஸ்.சரவணன், ஏ.அபிஷேக் சாமுவேல், ஜி.கார்த்திக், எம்.வாசமுத்து, பொன்வேல் ராம்குமார், மணிராஜ் ஆகியோர், தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில், செவ்வாய்க்கிழமை அளித்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

தூத்துக்குடி, ஜெயலானி தெருவைச் சேர்ந்தவர் கே.ஏ.பி. ராதாகிருஷ்ணன். இவரது மகன் பேச்சியப்பராஜா. இவர், சிறு வயது முதலே நண்பராகவும், தொழில் ரீதியான பழக்கமும் உடையவர்.

இவர், தொழில் விருத்தி செய்வதற்காகவும், வங்கிக் கடனை அடைப்பதற்காகவும் அவசரத் தேவை எனக் கூறி, எங்களிடம் தனித்தனியேபல்வேறு காலக்கட்டங்களில் மொத்தம் சுமார் ரூ.4 கோடிக்கு மேல் கடனாக வாங்கியுள்ளார்.

அவர், எல்லோரிடமும் கடன் தொகை பெறும்போது, அவரது சகோதரர்விஷ்ணு குமார் மற்றும் ரியா சௌத்ரி என்ற பெண்ணுடன் வந்தே வாங்கினார். அவர் வாங்கியக் கடன் தொகையை தொழிலுக்கு பயன்படுத்தாமல், உல்லாச வாழ்க்கைக்கு பயன்படுத்தியது பின்னர் எங்களுக்கு தெரிய வருகிறது.

இந்நிலையில், அவர் கடன் வாங்கிய பணத்தை திரும்பத் தருவதற்காக எங்களுக்கு தந்த வங்கிக் காசோலைகளை வங்கியில் செலுத்தியபோது, கணக்கில் பணம் இல்லாததால், அவை திரும்பிவந்துவிட்டன.

அதன்பின்னர் தான் அவர்கள் 4 பேரும் சேர்ந்து எங்களிடம் கூட்டுச் சதியில் ஈடுபட்டது தெரியவந்தது. எங்களை போல பலரிடம் மோசடி வேலையில் ஈடுபட்டதும் அம்பலமானது.

குறிப்பாக, இவர்கள் ஏற்கெனவே கடந்த 2015இல் விற்ற நிலத்தை, மறுபடி 2024இல் மற்றொருவருக்கு மோசடியாக விற்றுள்ளனர். மேலும், ஒருவருக்கு பெட்ரோல் பல்க்கை விற்றுவிட்டு, பல்க் உரிமத்தை எழுதி கொடுக்காமல் மீண்டும் பணம் கேட்டு தொடர்ந்து மிரட்டி வந்துள்ளனர்.

எனவே, மாவட்ட காவல் கண்காணிப்பாளர், இவர்கள் 4 பேரின் செயல்பாடுகள் குறித்து, விரிவான விசாரணை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட எங்கள் அனைவரது தனித்தனி புகார்களையும்ஒருங்கிணைத்து ஆய்வு செய்து, அவர்கள் 4 பேர் மீதும் வழக்குப் பதிந்து நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்டஎங்களின்பணத்தை மீட்டெடுக்க தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாவூர்சத்திரம் இலஞ்சி மேம்பால பணிகளை விரைந்து முடிக்க மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை




தென்காசி எம்எல்ஏ டாக்டர் கலை கதிரவன் நேரில் சந்திப்பு தென்காசி ஜூன் 18 தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத்தில் தொகுதிக்கு உட்பட்ட பாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ஆகிய பகுதிகளில் ரயில்வே மேம்பால பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் வித்துக்கொண்டேசெல்வதால்அந்தப்பணிகளை உடனேவிரைந்துமுடிக்க வேண்டும் என தென்காசி சட்டமன்ற உறுப்பினர்டாக்டர்கலை கதிரவன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ரஞ்சித் சிங் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

இது பற்றிய விவரமாவதுபாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்துமுடிக்கவேண்டும்* தென்காசி மாவட்ட ஆட்சியரிடம் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் அவர்கள் நேரில் கோரிக்கை.

பாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப்பணிகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்க வேண்டும் என தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலைக்கதிரவன் அவர்கள் தென்காசி மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்சித் சிங் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் அளித்துள்ள கோரிக்கை மனுவில்

தென்காசி மாவட்ட மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ள பாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகள் இதுவரை முழுமையாக நிறைவு பெறாமல் பொதுமக்களுக்கு மிகவும் அசவுகரியமாக உள்ளது.

இந்த இரண்டு மேம்பாலத் திட்டங்களிலும் நெடுஞ்சாலைத் துறை சார்பிலான பெரும்பாலான பணிகள் ஏற்கனவே நிறைவு பெற்ற நிலையில் ரயில்வே தண்டவாளத்தின் மேற்பகுதியில் அமைக்கப்பட வேண்டிய பாலப் பகுதியின் இணைப்பு பணிகளுக்கான அனுமதியை ரயில்வே நிர்வாகம் வழங்குவதில் ஏற்பட்டு வரும் தாமதமே, இத்திட்டங்கள் நிறைவு பெறாமல் இருப்பதற்கான முக்கிய காரணமாக உள்ளது.

இதனால் பொதுமக்கள் தினந்தோறும் பெரும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக, பள்ளி, கல்லூரி மாணவர்கள், அலுவலக ஊழியர்கள், வணிகர்கள், விவசாயிகள், அவசர மருத்துவ உதவி தேவைப்படுவோர் உள்ளிட்ட அனைவரும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர் விபத்துகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

எனவே, இவ்விவகாரத்தில் மாவட்ட நிர்வாகம் சிறப்பு கவனம் செலுத்தி, தெற்கு ரயில்வேநிர்வாகத்துடன் உடனடி ஒருங்கிணைப்பு மேற்கொண்டு, ரயில்வே தண்டவாளத்தின் மேற்பகுதி இணைப்புக்கான வரைபட ஒப்புதலை விரைந்து பெற்று பாவூர்சத்திரம் மற்றும் இலஞ்சி ரயில்வே மேம்பாலப் பணிகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

சந்திப்பின்போது தென்காசி மாவட்ட ரயில் பயணிகள் சங்க தலைவரும்,தென்காசிமாவட்ட சாலை பாதுகாப்பு குழு உறுப்பினருமான பாண்டியராஜா, தென்காசி தெற்கு மாவட்ட திமுக வர்த்தகர் அணி அமைப்பாளர் முத்துக்குமார், சாய்ராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்

# சாலை விபத்தில் உயிரிழந்த கூலித்தொழிலாளி நிவாரணம் வழங்க வேண்டி மாவட்ட ஆட்சியரிடம் முறையீடு



தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே கீழமுத்தனம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் அழகுமுருகன் கூலிவேலை செய்து வந்த இவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு தனது பணியை முடித்துக் கொண்டு இரவுவருஷநாடுசாலையில் சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் விபத்தில் சிக்கி தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்

தொடர்ந்து மேல்சிகைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார்

இதுகுறித்து கானா விளக்கு போலீசார் கடந்த மூன்று மாதங்களுக்குமுன்புவிசாரணை செய்து வந்து இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குற்றச்சாட்டு தெரிவித்து உயிரிழந்த அழகு முருகனின் சகோதரர் பிரதாபன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்

அடையாளம் தெரியாத வாகனம் மோதி தனது சகோதரன் அழகு முருகன் உயிரிழந்தால் அவரது குடும்பம் வாழ்வாதாரம் இன்றி ஏழ்மை நிலையில் உள்ளதாகவும் எனவே வாகன விபத்தில் சிக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரண நிதி வேண்டும் என்றும் விபத்து நடந்து மூன்று மாதங்களில் கடந்து முறையாக விசாரணை செய்யாமல் அலட்சியம் காட்டிய கானா விளக்கு போலீசார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்

# முடிவுக்கு வந்தது அமெரிக்காஈரான் போர் முழுமையாக திறக்கப்படும் ஹார்முஸ் நீரிணை



பாரிஸ்: பிரான்ஸ் நாட்டின் வெர்சாய் நகரில் வைத்து அமெரிக்கா-ஈரான் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், ஈரான் குடியரசுத் தலைவர் மசூத் பெசெஷ்கியன் ஆகியோர் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

சுமார் 110 நாள்கள் நடைபெற்ற இந்த போரால், உலக பொருளாதாரமே ஆட்டம் கண்டது. ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடி வைத்திருந்ததால், கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் தடை ஏற்பட்டு, அத்தியாவசிய பொருள்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்தது.

பிரான்ஸ் குடியரசுத் தலைவர் இம்மானுவேல் மேக்ரூன் வரவேற்றுள்ளார். ஹார்முஸ் நீரிணையை திறக்கவும், அமைதியை நிலைநாட்டவும் இந்த ஒப்பந்தம் உதவியாக இருக்கும்என்றுவாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாயி, "இருநாட்டு தலைவர்களின் கையெழுத்துகளுடன் அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது" என்று தெரிவித்துள்ளார். இந்த தகவலை அந்நாட்டு அரசின் செய்தி ஊடகமான ஐ.ஆர்.என்.ஏ(IRNA)வெளியிட்டுள்ளது. மே இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் மீது தொடங்கிய போர் முடிவுக்கு வந்துள்ளது. ஈரான் மீதான தாக்குதலின் தொடக்க நிகழ்விலேயே, அந்நாட்டின் உச்சத்தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். மேலும், 160-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் அமெரிக்கா ஏவிய ராக்கெட் குண்டுகளால் சிதைக்கப்பட்டனர்.

லும், அமெரிக்கா-ஈரான் இடையிலான போரை முடிவுக்கு கொண்டுவர மத்தியஸ்தம் செய்த பாகிஸ்தான் பிரதமர்ஷெபாஸ்ஷெரீப், "இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் உடனடியாக அமலுக்கு வரும்" என்று தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்காக, பாகிஸ்தான் தரப்பில் இருந்து அமெரிக்கா மற்றும் ஈரானுடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்திய நிலையில்,அவைதோல்வியில் முடிந்தது. இந்த சூழலில், இந்திய நேரப்படி இன்று அதிகாலை இருநாடுகளுக்கும் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. வெள்ளை மாளிகையும் இந்த தகவலை உறுதி செய்துள்ளதால், விரைவில் ஹார்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து சீர் செய்யப்பட்டு, கச்சா எண்ணெய் விலை கட்டுக்குள் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முறையே, பெட்ரோல்-டீசல் விலை குறைக்கப்பட்டு,

அத்தியாவசிய பொருள்களின் விலையும் சீராகும் நிலை உருவாகியுள்ளது.

## உலக யோகா தின விழா:

# தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு யோகாவின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ளசேர்மன்மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில் உலக யோகா தினத்தை முன்னிட்டு சிறப்பு விழா மற்றும் யோகா பயிற்சி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம்தலைமை தாங்கினார். ஆசிரியை பாண்டிசெல்வி வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக யோகா துறைத்தலைவரும் பேராசிரியருமான டாக்டர் சரோஜா கலந்துகொண்டு மாணவர்களுக்கு பல்வேறு யோகா ஆசனங்களை கற்றுக்கொடுத்து, யோகாவின் அவசியம் மற்றும் அதன் பயன்கள் குறித்துவிளக்கமளித்தார்.

அவர் பேசுகையில், "யோகாவை அனைவரும் தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் உடல் ஆரோக்கியம்மேம்பட்டு, உடல் தோற்றம் இளமையாகவும் புத்துணர்ச்சியுடனும் காணப்படும். உணவு உண்ணும் போது பேசுதல், செல்போன் பயன்படுத்துதல் போன்ற பழக்கங்களை தவிர்க்க வேண்டும். அமைதியான மனநிலையுடன் உணவை உண்ணுவது உடல்நலத்திற்கு நல்லது. மேலும், ஒவ்வொருவரும் கட்டாயம் தினமும் குறைந்தபட்சம் எட்டு மணி நேரம் தூங்க வேண்டும்" என்றார்.

இளமையான தோற்றத்தையும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் பெற நல்ல எண்ணங்கள் அவசியம் என்றும், உடற்பயிற்சி மற்றும் யோகா பயிற்சிகள் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதிக ஆசை, பொய், திருட்டு, பிறருடைய பொருட்களை அபகரித்தல் போன்ற தீய குணங்களை தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மாணவர்கள் உண்மை பேசுதல், ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் மதித்தல், அவர்களது அறிவுரைகளை பின்பற்றுதல், நண்பர்களுடன் நல்லுறவுடன் பழகுதல், பொய் பேசுவதைத் தவிர்த்தல் போன்ற நல்ல பண்புகளை வளர்த்துக் கொண்டால் நல்லஎண்ணங்கள் உருவாகும் என்றார். இளம்பருவத்திலேயே நல்ல சிந்தனைகள் உருவாகுவது யோகாவின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

"மனது என்பது உடலில் காணப்படும் ஒரு உறுப்பு அல்ல; நமது எண்ணங்களின் வெளிப்பாடே மனம். நல்ல எண்ணங்களை சிந்திப்பதன் மூலம் நமது ஆளுமை, குணநலன் மற்றும் சிந்தனைத்திறன் மேம்படும்" என அவர் விளக்கினார்.

தொடர்ந்து, மாணவர்களுக்கு விருச்சாசனம், வஜ்ராசனம், பத்மாசனம் உள்ளிட்ட யோகா ஆசனங்களின் பயன்கள் குறித்து விளக்கப்பட்டது. விருச்சாசனம் மனக்குவிப்பை அதிகரித்து கவனத்தை ஒருநிலைப்படுத்த உதவுகிறது. வஜ்ராசனம் செரிமானத்தை சீராக்குவதோடு வயிற்றுப் பகுதியில் உள்ள கொழுப்பைக் குறைக்க உதவுகிறது. பத்மாசனம் நரம்புகள் மற்றும் இரத்த ஓட்டத்தை சீராக்குவதில் பயனுள்ளதாக உள்ளது என்று அவர் கூறினார்.

நிகழ்ச்சியில்அழகப்பா பல்கலைக்கழகத்தின் பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி மாணவர் கோபி பங்கேற்றார்..

விழாவில் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிறைவாக ஆசிரியர் ஸ்ரீதர் நன்றி கூறினார்.



தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத்தின் சார்பாக, வடபாகம் காவல் நிலையத்திற்கு புதிய ஆய்வாளராக பொறுப்பேற்ற வேல்ராஜ்க்கு தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத்தலைவர் இசக்கிமுத்து மற்றும் முத்தரையர் கனவா மீன்பிடி நலசங்க பொருளாளர் எஸ்.ஆர்.சந்தனராஜ் ஆகியோர் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து, சால்வை அணிவித்து அவரது மக்கள் பணி சிறக்க சங்கத்தின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகள் தெரிவித்தனர்.இதில் தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிற்சங்க துணைத் தலைவர் மாரிலிங்கம், செயலாளர் முருகையா, ஆலோசகர் எஸ்.ஆர்.சந்தனராஜ் மகாராஜா, அகமது மாற்று முத்தரையர் கனவா மீன்பிடி நல சங்க தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச்செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து உடனிருந்தனர்.




தூத்துக்குடி மாவட்ட சமத்துவ மக்கள் கழகம் நாடார் பேரவை சார்பில் வருகின்ற ஜூலை 19ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடியில் மிக பிரமாண்டமாக நடைபெறும் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாள் விழா அழைப்பிதழை சமத்துவ மக்கள் கழகம் மற்றும் நாடார் பேரவை மாநில தலைவர் எர்ணாவூர் நாராயணனிடம் தூத்துக்குடி மாவட்ட சமத்துவ மக்கள் கழகம் செயலாளர் மாலைசூடி அற்புதராஜ், நாடார் பேரவை மாவட்ட வழக்கறிஞர் வைகுந்த் ஆகியோர் வழங்கினார்கள். இந்த நிகழ்வில் மாநில பொருளாளர் வக்கீல் கண்ணன், மாநில துணை பொதுச் செயலாளர் வக்கீல் விநாயகமூர்த்தி, மாநில கலைஇலக்கிய அணி செயலாளர் வக்கீல் அந்தோணி பிச்சை, ஆகியோர் உடன்இருந்தனர்.

# முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் 24ம் தேதி நடக்கிறது; கலெக்டர் கந்தசாமி தகவல்

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்களுக்காகவும் மற்றும் படையில் பணிபுரிவோரின் சார்ந்தோர்களுக்காகவும் முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் 24.06.2026 புதன்கிழமை அன்று காலை 09.00 மணியளவில் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தரைத்தளத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

ஈரோடு மேற்படி முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர்களின் சார்ந்தோர்களும் தங்களது கோரிக்கை மனுக்களை இரண்டு பிரதிகளில் நேரில் சமர்ப்பிக்கலாம் என ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்கள்.



# பெருந்துறை காவல் நிலையம் போக்சோ வழக்கில் குற்றவாளிக்கு ஈரோடு மகிளா நீதிமன்றம் 20 வருடங்கள் கடுங்காவல் தண்டனை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பு



ஈரோடு மாவட்டம் பெருந்துறை காவல் நிலையத்தில் பதிவு செய்த போக்சோ குற்ற வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆறுமுகம் (எ) ஆரான் (70), த/பெ. சென்னி, பாலக்கரை, தோப்புபாளையம் காலனி, பெருந்துறை என்பவரை கடந்த 06.10.2023 ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது. வழக்கின் விசாரணையானது ஈரோடு மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் இன்று 17.06.2026 தேதி மேற்படி குற்றவாளியான ஆறுமுகம் (எ) ஆரானுக்கு வழக்கில் 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.5,000/– அபராதம் விதித்தும், மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு சார்பில் ரூ.2,00,000/– நிவாரண தொகையாக வழங்கவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.5 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் சிக்கியது



சென்னை: சென்னை விமான நிலைய வளாகத்தில் கேட்பாரற்று இருந்த ரூ.5 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை விமான நிலைய வளாகத்தில் பழைய விமான நிலைய கார்கோ பகுதியில், ஒரு பார்சல் கேட்பாரற்று இருந்தது. இதனை பார்த்த பாதுகாப்பு படை வீரர்கள், அது வெடிபொருள் இல்லையென உறுதி செய்த பின் சுங்கத் துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் சோதித்ததில் பவுடர் போன்ற பார்சல் இருந்தது. அதை ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பி சோதனை செய்ததில், அது போதைப் பொருள் என்பது தெரியவந்தது. இதன் மதிப்பு ரூ.5 கோடியாகும்.

இது குறித்து சுங்கத்துறை அதிகாரிகள், போதைப் பொருள் கடத்தல் பிரிவுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர். இந்தச் சம்பவம் விமான நிலைய வளாகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# 4 ஆண்டுகளுக்கு பிறகு முழுமையாக படிக்கப்பட்ட கவர்னர் உரை..!



தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டம் கவர்னர் உரையுடன் தொடங்கியது. தமிழக பொறுப்பு கவர்னரான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், ஆங்கிலத்தில் பேசினார்.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, கவர்னராக இருந்த ஆர்.என்.ரவி, 2022–ம் ஆண்டு சட்டசபையின் முதல் கூட்டத்தில், தனது உரையை முழுமையாக படித்தார். அரசின் அறிவிப்புகள், திட்டங்கள் குறித்துஎடுத்துரைத்தார்.

ஆனால், 2023–ம் ஆண்டு சட்டசபை முதல் கூட்டத்தில் பேசிய கவர்னர் ஆர்.என்.ரவி, தனது உரையில் இருந்த மகளிர் முன்னேற்றம், மதச்சார்பின்மை, சுயமரியாதை, பெரியார், அம்பேத்கர், கருணாநிதி ஆகிய சொற்களை கூறாமல் தவிர்த்தார்.

இதனால், அவையில் சலசலப்பு ஏற்பட்டது. அப்போதுஎழுந்துபேசிய முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசு கொடுத்த உரையில் இருப்பதுதான் அவைக் குறிப்பில் ஏற்றப்படும் என்று கூற, அவையில் இருந்து கவர்னர் ஆர்.என்.ரவி வெளியேறினார்.

தொடர்ந்து, 2024–ம் ஆண்டு சட்டசபை முதல் கூட்டத்தில் பேச வந்த கவர்னர் ஆர்.என்.ரவி, தனது உரைக்கு முன்னால், தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும் பாடப்பட்டது, தேசிய கீதம் பாடப்படவில்லை என்று கூறி, உரையை வாசிக்காமல் புறக்கணித்து சென்றார். ஆனாலும், கவர்னர் உரையை தமிழில் வாசித்த சபாநாயகர் அப்பாவுவின் பேச்சு அவைக்குறிப்பில் ஏற்றப்பட்டது.

தேசிய கீதம்

கடந்த ஆண்டு (2025) சட்டசபையின் முதல் கூட்டத்தில் பேச வந்த கவர்னர் ஆர்.என்.ரவி, முந்தைய ஆண்டில் கூறிய அதே காரணத்தை மீண்டும் எழுப்பி, அவையில் உரையை வாசிக்காமல் வெளியேறினார்.

இந்த ஆண்டு (2026) தொடங்கத்தில் நடைபெற்ற முதல் சட்டசபை கூட்டத்திலும், தேசிய கீதம் பாடப்படவில்லை என்று கூறி, மீண்டும் உரையை வாசிக்காமல் கவர்னர் ஆர்.என்.ரவி வெளியேறினார். இப்படி, 2023–ம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை 4 முறை அவர் கவர்னர் உரையை முழுமையாக வாசிக்கவில்லை. தற்போது, ஆர்.என்.ரவி மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழகத்திற்கு இன்னும் புதிய கவர்னர் நியமிக்கப்படவில்லை. கேரள கவர்னராகஇருக்கும் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் , தமிழக பொறுப்பு கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். த.வெ.க. அரசின் முதல் சட்டசபை கூட்டத்தில் பேசிய அவர், தனது உரையை முழுமையாக வாசித்தார்.

## ஈரோடு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு கிடங்கில் முதல் நிலை சரிபார்ப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான ச.கந்தசாமி நேற்று (18.06.2026) ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள (EVM) பாதுகாப்பு கிடங்கில் மூன்றாம் நாளான நேற்று மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதல் நிலை சரிபார்ப்பு பணியினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டம் 103 பெருந்துறை சட்டமன்ற தொகுதியில் காலியாக அறிவிக்கப்பட்டு இடைத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) பாதுகாப்பு கிடங்கினை (16.06.2026) அன்று ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான ச.கந்தசாமி தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்பட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல்நிலை சரிபார்ப்பு (First Level Checking FLC) பணிகள் துவங்கப்பட்டது. இச்சரிபார்ப்புப் பணிகள் 16.06.2026 அன்று தொடங்கப்பட்டு மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் இச்சரிபார்ப்பு பணிகள் இன்னும் 2 நாட்கள் நடைபெறவுள்ளன.

பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தலுக்கு VVPAT பயன்படுத்தவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் கருவிகளை சரி பார்க்க 6 பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (Bharat Electronics Limited) மென் நிறுவன பொறியாளர்களின் செயல்முறைகளை விவரங்களை பார்வையிட்டு கேட்டறிந்தார்.

இந்த முதல் கட்ட சரிபார்ப்புப் பணிகளின் போது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் VVPAT கருவிகளின் செயல்திறன், தொழில்நுட்பத் தகுதி மற்றும் பயன்பாட்டுத் தன்மை ஆகியவை இச்சரிபார்ப்பின் போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிகழ்வில் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு கிடங்கில் 103 பெருந்துறை சட்டமன்ற தொகுதியில் 292 வாக்குச்சாவடிகளுக்கு (200 சதவீதம்) Ballot Unit – 584, Control Unit – 584 மற்றும் VVPAT – 584 எண்ணிக்கையிலான வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு முதல்நிலை சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, மாதிரி வாக்குப்பதிவு (Mock Poll) நடத்தப்பட உள்ளது. தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி தேர்வு செய்யப்படும் இயந்திரங்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படவுள்ளது. மேலும், தேர்தல் தொடர்பான அனைத்து முன்னேற்பாடுகளும் இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படியும், வெளிப்படைத்தன்மையுடனும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முழுமையான

தொடர்ந்து, கூடுதல் தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் கூடுதல் செயலாளர் வி.ஸ்ரீதர் முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை தணிக்கைச் செய்தார்.

இந்த ஆய்வின் போது, உதவி இயக்குநர் பேரூராட்சிகள் வெங்கடேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) மகேஸ்வரி, வட்டாட்சியர் சண்முக சுந்தரம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் நேற்று (18.06.2026) மாநகராட்சி மண்டலம் 1, வார்டு எண் 2, கோணவாய்க்கால் பகுதியில் மாநகராட்சி நிர்வாகம், கால்நடை பராமரிப்புதுறை மற்றும் அனிமல் ஹெல்பிங் ஹேண்ட்ஸ் இணைந்து நடத்தும் இலவச வெறிநோய் தடுப்பூசி முகாமினை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் துணை மேயர் வே.செல்வராஜ் அவர்கள், மண்டல தலைவர் ப.க.பழனிச்சாமி, மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன் அவர்கள், உதவி ஆணையாளர் சரோஜாதேவி, கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள், மருத்துவர்கள், சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

# சட்டப்பேரவையில் கேள்வி, பதில் நேரம் கிடையாது: சபாநாயகர் பிரபாகர் அறிவிப்பு



சென்னை: "இது குறுகிய கால கூட்டத்தொடராக இருக்கும் காரணத்தால், கேள்விகளை அனுப்பி அந்தந்த துறைகளில் பதில்களை பெற்றுத்தருவதில் காலதாமதம் ஏற்படும். எனவே இந்தக் கூட்டத்தொடரில் வினா-விடை நேரம் இருக்காது" என சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவை அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் இன்று நடைபெற்றது. இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், "அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, வரும் ஜூன் 19, 22, 23 ஆகிய தேதிகளில் ஆளுநர் உரை மீது விவாதம், பதிலுரை ஆகியவை நடைபெறும். ஜூன் 19-ம் தேதி மறைந்த முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு இரங்கல் குறிப்புகள் இருக்கும். முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர் நல்லக்கண்ணு, திரைப்பட இயக்குநர் பாரதிராஜா, முன்னாள் சட்டப்பேரவைச் செயலாளர் சி.கு. ராமசாமி, திரைப்பட தயாரிப்பாளர்கள் ஆர்.பி.சவுத்ரி, கே.ராஜன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

து குறுகிய கால கூட்டத்தொடராக இருக்கும் காரணத்தால், கேள்விகளை அனுப்பி அந்தந்த துறைகளில் பதிலைப் பெற்றுத் தருவதில் காலதாமதம் ஏற்படும். எனவே இந்தக் கூட்டத் தொடரில் வினா-விடை நேரம் இருக்காது.

தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும் என்பதே நம் நோக்கம். தேசிய கீதம் இன்று இருமுறை பாடப்பட்டதில் தவறு ஏதும் இல்லை. இந்த நடைமுறை தொடர்வது நலமாக இருக்கும். மிக நீண்ட இடைவேளைக்கு பிறகு மிக சுமுகமான முறையில் இந்த சட்டப்பேரவை கூட்டம் நடத்த ஒத்துழைப்பு தந்த ஆளுநருக்கு நன்றி தெரிவிக்க கடமைப் பட்டுள்ளேன்.

சட்டப்பேரவை நிகழ்வுகளை முழுமையாக நேரலை செய்வது குறித்து பரிசீலனை செய்து வருகிறோம். அலுவல் ஆய்வுக் குழுவில் தேவையான எண்ணிக்கையில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிமுக சட்டப்பேரவைக் குழு தலைவர், கொறடா குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும். அதிமுகவிலிருந்து ராஜினாமா செய்த 4எம்எல்ஏக்கள் 7 தினங்களுக்குள் விளக்கம் அளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அவர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர், அது ஆய்வில் உள்ளது. இதுபற்றி ஆய்வுக்குப் பின்னர் உரிய முடிவு எடுக்கப்படும்" எனத் தெரிவித்து உள்ளார்.

# "இரண்டு முறை தேசிய கீதம் பாடப்பட்டதில் தவறொன்றும் இல்லை" பிரேமலதா கருத்து



சென்னை: "சட்டப்பேரவையின் மரபு மாற்றப்பட்டு அவையில் இரு முறை தேசிய கீதம் பாடப்பட்டது. அதை நாம் வரவேற்போம்; இதில் தவறு ஒன்றும் கிடையாது." என தேதிமுக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் 17-வது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர். வி.அர்லேகர் தலைமையில் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது, இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் உரையை வாசித்தார். சட்டப்பேரவையின் மரபு மாற்றப்பட்டு அவையில் இரு முறை தேசிய கீதம் பாடப்பட்டது. அவையின் தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து, முடிவில் தேசிய கீதம் பாடுவதே மரபு. இதை மாற்றி, இன்று தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தேசிய கீதமும் பாடப்பட்டது. பின்னர், ஆளுநர் உரைக்கு பின்னரும் 2-வது முறையாக தேசிய கீதம் பாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தேசிய கீதம் இரண்டு முறை பாடப்பட்டுள்ளது. அதை நாம் வரவேற்போம்; இதில் தவறு ஒன்றும் கிடையாது. அதற்கு முன்னர் தமிழ்த் தாய் வாழ்த்து பாடியிருக்கிறார்கள்; அதையும் நாம் வரவேற்போம். ஆளுநர் உரை ஆளும் கட்சி தரப்புக்கு ஆதரவான உரையாக இருந்தது" என்று அவர் தெரிவித்தார்.

# வாட்ஸ் அப் மூலம் குறுந்தகவல் அனுப்பி ஐநாக்ஸ் நிர்வாக இயக்குநர் பெயரில் ரூ.10.4 கோடி மோசடி



மும்பை: ஐநாக்ஸ் நிறுவனத்தில் துணை தலைமை மேலாளராகப் பணி யாற்றுபவர் கிரிஸ் அமின். இவருக்கு தெரியாத எண் ஒன்றில் இருந்து நிர்வாக இயக்குநர் சித்தார்த் ஜெயின் போட்டோவுடன் வாட்ஸ் அப் தகவல் ஒன்று வந்தது.

அதில் 'இது எனது தனிப்பட்ட போன் எண், இதை யாரிடமும் தர வேண்டாம். சித்தார்த் ஜெயின்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த 3-ம் தேதி அதே எண்ணில் இருந்து ஒரு வாட்ஸ் அப் தகவல் வந்தது. அதில் ஒரு வங்கிக் கணக்கை குறிப்பிட்டு, கம்பெனி கணக்கில் இருந்து ரூ.46.5 லட்சத்தை அனுப்பவும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி அந்த வங்கிக் கணக்குக்கு ரூ.46.5 லட்சத்தை அமின் அனுப்பினார்.

இது போல அடுத்தடுத்து 63 முறை மொத்தம் ரூ.10 கோடியே 40 லட்சத்து 71,924-ஐ அனுப்பியுள்ளார். இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை அமின் தனது முதலாளியை அலுவலக லேண்ட்லைன் மூலம் தொடர்பு கொண்டு அனுப்பப்பட்ட பணத்துக்கு ரசீதுகளைக் கேட்டுள்ளார். அப்போது, சித்தார்த் ஜெயின் நான் எப்போது பணம் அனுப்ப சொன்னேன் என்று கேட்டுள்ளார். அப்போது தான் மிகப் பெரிய மோசடி நடை பெற்றது தெரிந்தது.

இது குறித்து ஐநாக்ஸ் நிறுவனம் சார்பில் மும்பை போலீஸில் புகார் அளிக்கப்பட்டது. போலீஸார் நடத்திய புலன் விசாரணையில் பணம் டெல்லியில் உள்ள வங்கி கணக்குகளுக்கு மாற்றப்பட்டது தெரிய வந்தது. இதுகுறித்து டெல்லி போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளைத் தொடர்பு கொண்டு, மோசடி நபர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்து யாராவது பணம் எடுக்க வந்தால் தகவல் தெரிவிக்கும்படி கூறினர்.

4 பேர் கைது

டெல்லி ஐடிஎப்சி வங்கி ஜ சோலா கிளையில் உள்ள வங்கிக் கிளைக்குத் தங்கள் வங்கி கணக்கில் இருந்து ரூ.8 லட்சம் பணம் எடுக்க 2 பேர் வந்தனர். வங்கி அதிகாரிகள் அளித்த தகவலின்படி போலீஸார் விரைந்து வந்து அந்த 2 பேரை கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில், தங்கள் வங்கி கணக்குக்கு வரும் பணத்தை எடுத்துக் கொடுத்தால் ரூ.30,000 கமிஷன் தருவதாக சிலர் கூறியதால் தங்கள் வங்கி கணக்கை மர்ம நபர்களிடம் தெரிவித்ததாக கூறினர். இதுதொடர்பாக மேலும் 2 பேரை போலீஸார் கைது செய்தனர். மோசடிக்கு மூளையாக செயல்பட்டவரை போலீஸார் தேடி வருகின்றனர்.

# "திமுகவுக்கு அஞ்சும் தவெகவின் 'வெள்ளை அறிக்கை' ஒரு வீண் வேலை" கிருஷ்ணசாமி விமர்சனம்



சென்னை: "கடந்த திமுக ஆட்சியின் நிதி மேலாண்மை தொடர்பாக, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தவெக அரசின் வெள்ளை அறிக்கை, வெற்று அறிக்கையாகிவிட்டது என்றும், பூகம்பம் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது புஸ்வானம் ஆகிவிட்டது," என்றும் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள அறிக்கை விவரம்: கடந்த திமுக ஆட்சியின் நிதி மேலாண்மை தொடர்பாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தவெக அரசின் "வெள்ளை அறிக்கை" நேற்று முன் தினம் வெளியிடப்பட்டது. முதல்வர் விஜய்யின் அரசு வெளியிடும் வெள்ளை அறிக்கை, அரசியல் பொருளாதாரத் தளத்தில் தமிழகத்தைத் தாண்டி பெரும் பூகம்பத்தைக் கிளப்பப்போகிறது என்று அனைத்துத் தரப்பினரும் எதிர்பார்த்தார்கள். விஜய் மிகப்பெரிய அஸ்திரத்தைத் தூக்கிப்போட்டு வெடிக்கச் செய்யப்போகிறார் என்றே அனைவரது எதிர்பார்ப்பும் இருந்தது. ஆனால், அப்படி எதுவும் நடைபெறவில்லை.

தேர்தல் நேரத்தில் அனைத்துத் தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட ரூ.10 லட்சம் கோடி கடன் குற்றச்சாட்டையே, 'பழைய கள் புதிய மொந்தை' என்பதைப் போல, பொதுத்துறை நிறுவனங்கள் வாங்கிய கடனையும் சேர்த்து ரூ.13 லட்சம் கோடி கடன் என்பதை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

வெள்ளை அறிக்கை வெளியிடும் முன் வெறும் புள்ளிவிவரங்களை மட்டும் சொன்னால் போதாது; அதற்கான அடிப்படை காரணங்களையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்; அதற்கான தீர்வுகளையும் தெள்ளத் தெளிவாக வெளியிட வேண்டும். 2011 - 2021 வரையிலான அஇஅதிமுக ஆட்சியில் இருந்த ரூ. 5 லட்சம் கோடி கடனானது 2021 - 2026 திமுக ஆட்சியில் ரூ 10 லட்சம் கோடியாக அதிகரித்ததற்கான காரணத்தை இந்த அரசு சுட்டிக்காண்பித்திருக்க வேண்டும் - ஆனால், அவ்வாறு செய்யவில்லை. வெள்ளை அறிக்கை வெளியிடும்போது, அதை வெளியிடும் அரசுக்குத் தெளிவான பார்வையும் மனோதைரியமும் இருந்திடல் வேண்டும். ரூ.10 லட்சம் கோடி கடன் இருந்ததை அனைத்துத் தரப்பினரும் அறிவார்கள்; ஆனால், அதை வெள்ளை அறிக்கையாக வெறும் புள்ளி விவரமாக மட்டும் நாம் இந்த அரசிடம் எதிர்பார்க்கவில்லை.

ரூ.5 லட்சம் கோடியாக இருந்த கடன், ஐந்தாண்டில் இரண்டு மடங்கு அதிகரிக்க உண்மையான காரணம் என்ன? அதிகமாகப் பெறப்பட்ட கடன் எந்தத் திட்டத்திற்காகச் செயல்படுத்தப்பட்டுள்ளது? மக்களுக்குப் பயனளிக்கும் திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டதா அல்லது ஊதாரித்தனமான திட்டத்திற்குச் செலவிடப்பட்டதா? அல்லது எந்தத் திட்டத்திற்கும் செலவழிக்காமல் கடன் பெற்று மிகப்பெரிய ஊழலோ அல்லது நிதி முறைகேடோ நடைபெற்றுள்ளதா என்பதைப் பற்றி இந்த அரசு விளக்கியிருந்தால், அது அறிவுப்பூர்வமான, ஆழமான வெள்ளை அறிக்கையாகக் கருதப்பட்டிருக்கும். ஏப்ரல் 23ஆம் தேதி வரையிலும் தனது தேர்தல் பரப்புரையில் மூலைமுடுக்கெல்லாம் கடந்த ஆட்சியைக் குற்றம் சுமத்திவிட்டு, மே மாதம் பத்தாம் தேதி பதவி ஏற்பு விழாவில் "கஜானா காலி" என்று அறிவித்துவிட்டு, அதை விடுத்து, "இது கடந்த கால அரசை குறைகூறும் நோக்கம் கொண்டது அல்ல. மாறாக, மாநிலத்தின் நிதிநிலை குறித்த ஒரு பகுப்பாய்வு மட்டுமே. யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை" எனப் பூசி மெழுக வேண்டிய அவசியம் என்ன? திமுகவைக் கண்டு பயப்படும் இந்த அரசுக்கு எதற்கு இந்த வீண் வேலை?

தமிழகத்தில் சட்டவிரோதமாக மணல் கொள்ளை, குண்டுகற்கள் மற்றும் கருங்கல் ஜல்லி உள்ளிட்ட முக்கியமான கனிம வளங்கள் கொள்ளை; அதனால் ஏற்படும் வருவாய் இழப்பு போன்றவற்றைச் சரி செய்ய எவ்வழியும் சொல்லப்படவில்லை. அரசின் ஒவ்வொரு துறையிலும் ஊழல் மலிந்து கிடைக்கிறது.

மின்வாரியத்தில் டிரான்ஸ்பார்மர்கள் வாங்குவதிலும், போக்குவரத்துத் துறையிலும், அனைத்து மட்டங்களிலும் ஊழல்; பதிவுத்துறையிலும் ஊழல் மலிந்து அரசுக்கு வரவேண்டிய பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் யார் யாருக்கோ போய்விட்டது. அவற்றை அடியோடு ஒழித்து நிதி மேலாண்மை சரி செய்யப்படும் என்று இந்த அறிக்கையில் சொல்லவில்லை. அதேபோன்று, மது போதைக்கு அடிமையாவதால் தமிழகத்தில் லட்சோபலட்சம் குடும்பங்கள் வறிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன; எண்ணற்ற இளம் விதவைகள் உருவாகின்றார்கள். எனவே, டாஸ்மாக்கிலிருந்து பல ஆயிரம் கோடிகள் வருமானம் வந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டோம்; தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்று வெள்ளை அறிக்கையில் குறிப்பிடவில்லை. ரூ.78,000 கோடி வரி வருவாய் பற்றாக்குறை என்று குறிப்பிட்டுவிட்டு, எவ்வாறு வரி வருவாயைப் பெருக்கப் போகிறார்கள் என்று தெளிவாக விளக்கவில்லை.

# கேரள அரசு ஆயுர்வேத மருத்துவமனையில் 25 மாணவர்களுக்கு வாந்தி, பேதி... ஷிகெல்லா தொற்றா என அச்சம்?




கேரளாவில் ஷிகெல்லா தொற்று அதிகரித்து வரும் சூழலில், திரிபுனித்துறா பகுதியில் உள்ள அரசு ஆயுர்வேத கல்லூரியில் உள்ள விடுதியில் தங்கியிருந்த 25-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வாந்தி, டயோரியா (பேதி) உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன.

கல்லூரிக்கு விடுமுறை

இதனை தொடர்ந்து ஒரு வார காலத்திற்கு கல்லூரிக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது என அதிகாரிகள் இன்று தெரிவித்தனர். மாணவிகளின் விடுதியில் முதலில் இந்த பாதிப்புகள் தெரிய வந்தன. பின்னர் மாணவர்களின் விடுதியிலும் பாதிப்புக்கான அறிகுறிகள் ஏற்பட்டு உள்ளன.

இதனை தொடர்ந்து, விடுதியின் தண்ணீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதனைக்கு கொண்டு செல்லப்பட்டன. பாதிக்கப்பட்ட மாணவர்களிடம் இருந்தும் மாதிரிகள் சேகரிக்கப்படும். அவற்றை ஆய்வு செய்து, அவர்களுக்கு ஷிகெல்லா தொற்று அல்லது வேறு ஏதேனும் பாக்டீரிய தொற்று ஏற்பட்டிருக்கா? என்பது பற்றி பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

கேரள சுகாதார துறை மந்திரி முரளீதரன் நேற்று கூறும்போது, கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை 146 ஷிகெல்லா பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டு உள்ளன. இவற்றில் 70 பேருக்கு கடந்த ஜூனில் தொற்று உறுதியாகி உள்ளது என கூறினார். இது மொத்த பாதிப்பில் 50 சதவீதம் ஆகும். இதனால், நடப்பு மாதத்தில் இந்த பாதிப்பு மளமளவென அதிகரித்து உள்ளது தெரிய வந்துள்ளது. அதற்கான முன்னெச்சரிக்கை மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தி வருகிறது.

கேரளாவில் ஷிகெல்லா எனப்படும் பாக்டீரியா தொற்று விரைவாக பரவி வருகிறது. இதில், கோழிக்கோடு மாவட்டத்தில் அதிக பாதிப்புகள் பதிவாகி உள்ளன. இதில், கடந்த ஜனவரியில் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், சீராக பாதிப்பு அதிகரித்து வருகிறது. கேரளாவில் ஷிகெல்லா தொற்றுக்கு மரணம் அடைந்தோர் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்து உள்ளது.

கேரள சுகாதார துறை மந்திரி முரளீதரன் நேற்று கூறும்போது, கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை 146 ஷிகெல்லா பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டு உள்ளன. இவற்றில் 70 பேருக்கு கடந்த ஜூனில் தொற்று உறுதியாகி உள்ளது என கூறினார். இதனால், நடப்பு மாதத்தில் இந்த பாதிப்பு மளமளவென அதிகரித்து உள்ளது தெரிய வந்துள்ளது. அதற்கான முன்னெச்சரிக்கை மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தி வருகிறது.

# Amid TMC, Shiv Sena (UBT) rebellions, the numbers that could benefit NDA in Parliament



*Recent political developments involving the Trinamool Congress (TMC) and Shiv Sena (Uddhav Balasaheb Thackeray) have ignited fresh discussion over the BJP-led National Democratic Alliance (NDA). Whether they can move closer to the two-thirds majority required to pass major delimitation amendments is the one of the biggest discussions.*

*The debate gained momentum after reports of a split within the TMC and signs of rebellion among MPs belonging to the Shiv Sena (UBT). While the numbers have improved for the ruling alliance, the NDA remains short of the required numbers for constitutional amendments in both Houses of Parliament.*

*Constitutional amendments require approval by a special majority in Parliament. Earlier this year, the government introduced bills linked to delimitation and the implementation of women's reservation. But failed to secure the required support. The proposed legislation requires a stronger parliamentary majority than the NDA currently possesses.*

*Delimitation refers to the redrawing of parliamentary constituencies based on population changes. Several opposition parties, particularly from South India, have raised concerns about fresh delimitation exercise. They argue that delimitation could alter the balance of representation in the Lok Sabha.*

*According to recent parliamentary calculations, the NDA currently holds 293 seats in the 540-member Lok Sabha. A two-thirds majority would require support from around 360 members.*

*The alliance's strength could rise if rebel MPs from opposition parties back the NDA. Reports suggest that seven rebel TMC MPs and six rebel Shiv Sena (UBT) MPs could support the ruling alliance. If that happens, the NDA's strength in the Lok Sabha could rise from 293 to 316 seats. Even then, it would remain more than 40 seats short of the two-thirds mark of 360.*

*Rajya Sabha equation*

*The picture is slightly different in the Rajya Sabha.*

*The NDA currently holds 149 seats in the Upper House. Following the recent Rajya Sabha elections and potential bypoll gains in West Bengal. The strength is expected to increase further. According to projections, the alliance's tally could rise to 158 seats. Since the two-thirds mark in the Rajya Sabha is 164, the NDA would then be only six seats short of the required number.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.